தினமலர்
உண்மையின் உரைகல்

**தலையங்கம்: ஊழலுக்கு உரமிடுவோர்!**

First Published : 18 Oct 2011 01:53:50 AM IST

லஞ்சம் வாங்கிய அதிகாரி கைது என்று அன்றாடம் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இவர்கள் மீது என்னதான் நடவடிக்கை எடுக்கப்படுகிறது? என்கின்ற புள்ளிவிவரங்கள் தெரிவிக்கப்படுவதே இல்லை.
ஒரு அதிகாரி குறித்து புகார் வந்தால், அதை மத்திய லஞ்ச ஒழிப்புத் துறை விசாரணை நடத்துகிறது. அவர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பரிந்துரைக்கிறது. ஆனால், அவர் பணியாற்றும் துறையோ கடுமையான நடவடிக்கையை எடுக்காமல், ஏதோ ஒப்புக்கு நடவடிக்கை எடுக்கிறது என்பதுதான் மத்திய லஞ்ச ஒழிப்புத் துறை தற்போது தெரிவித்துள்ள புகார்.

ஹரியாணா வனத்துறை அதிகாரிகள் சிலர் ஒன்று சேர்ந்து வனவிலங்குகள் சரணாலயத்துக்கு பாதகம் ஏற்படும் வகையில் தனியார் பண்ணைகளை மேம்படுத்த அனுமதி அளித்து அதன் மூலம் பல கோடி ரூபாய் பலன் பெற்றுள்ளதாகக் குற்றச்சாட்டு எழுந்தது. இந்தப் புகார் குறித்து அமைச்சர் விசாரணை நடத்த உத்தரவு பிறப்பிக்கிறார். அமைச்சரவை இலாகா மாற்றத்துக்குப் பிறகு இன்னொருவர் வனம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சராகிறார். அதைத் தொடர்ந்து, சுற்றுச்சூழல் அமைச்சகத் துறையிலிருந்து லஞ்ச ஒழிப்புத் துறைக்கு ஒரு கடிதம் வருகிறது. என்னவென்று? விசாரணை தேவையில்லை. அந்தக் கோப்புகளை முடித்துக்கொள்ளலாம் என்று.
ஜூலை மாதம் வரையிலும் மத்திய லஞ்ச ஒழிப்புத் துறையில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து மத்திய அரசு அறிக்கை அளித்துள்ளது.

""சில அரசுத் துறைகள் தங்கள் ஊழியர் மீது, குறிப்பாக அதிகாரிகள் மீது நாங்கள் பரிந்துரைக்கும் கடுமையான நடவடிக்கையை நீர்த்துப்போகச் செய்துவிடுகின்றன. சாதாரண எளிய தண்டனையாக மாற்றிவிடுகின்றன'' என்பதுதான் இந்த அறிக்கையில் மத்திய லஞ்ச ஒழிப்புத் துறை தெரிவித்துள்ள கசப்பான கருத்து.

அதுமட்டுமல்ல, 2010-ம் ஆண்டில் 2,982 அதிகாரிகளை லஞ்ச ஒழிப்புத் துறை தண்டித்துள்ளது. இவர்களில் 99 பேர் மட்டுமே வேலைநீக்கம் செய்யப்பட்டவர்கள் அல்லது கட்டாய ஓய்வில் செல்லுமாறு துறையால் பணிக்கப்பட்டவர்கள். மற்றவர்கள் பணியில் தொடர்ந்து

கொண்டிருக்கிறார்கள். ஒரு ஊதிய உயர்வு ரத்து, அல்லது சில மாதங்கள் இடைநீக்கம் என்று இவர்கள் சிறு தண்டனை பெற்று மீண்டும் பணிக்கு வந்துவிடுகிறார்கள்.
நடப்பாண்டில் ஜூலை 2011 வரை மத்திய லஞ்ச ஒழிப்புத்துறை விசாரணை நடத்திய லஞ்சம் மற்றும் ஊழல் முறைகேடு தொடர்பான 1,681 புகார்களில் 1,263 புகார்களுக்குத் தேவையான நடவடிக்கைகள் குறித்து அந்தந்த துறைகளுக்கு அனுப்பி விட்டார்கள். ஆனால், தண்டனை நிறைவேற்றப்படுமா அல்லது நீர்த்துப்போகுமா என்பது, அந்த அதிகாரி அத்துறையில் பெற்றிருக்கும் செல்வாக்கைப் பொறுத்தது அல்லது அவருக்கு மாநில, மத்திய ஆட்சியாளர்களிடம் இருக்கும் நெருக்கத்தைப் பொறுத்தது.

இந்த ஆண்டு அதிக தண்டனை பெற்றவர்களில் 165 பேர் ரயில்வே துறையைச் சேர்ந்தவர்கள். சுமார் 45 பேர் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளைச் சேர்ந்தவர்கள். 9 பேர் வருங்கால வைப்புநிதி அலுவலகத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால், அரசுத் துறைகளில் கைது செய்யப்பட்டோர் என்னவாகிறார்கள்? இவர்களுக்கு அதிகபட்ச தண்டனை கிடைப்பதே இல்லையா என்கின்ற கேள்வி எழுகிறது.
ஊழியர் அமைப்புகள் கண்ணை மூடிக்கொண்டு தவறு செய்த ஊழியர்களைப் பாதுகாக்க வருவதுதான் இன்று ஊழல் அலுவலர்களை, முறைகேடு செய்வோரை, வேலையை ஒழுங்காகச் செய்யாத ஊழியரை அம்பலப்படுத்த பெரும் தடையாக இருக்கிறது என்பதுதான் நடைமுறை உண்மை. ஊழியர்களின் நலனைப் பேணவும் உரிமைகளைப் பாதுகாக்கவும் குரலெழுப்ப வேண்டிய ஊழியர் அமைப்புகள், தவறு செய்பவர்களைத் தட்டிக் கேட்டு நிர்வாகம் முறையாக நடைபெற உதவவேண்டிய ஊழியர் அமைப்புகள் குற்றவாளிகளின் ஏவலாளிகளாக, ஊழல் பேர்வழிகளின் பாதுகாவலர்களாகச் செயல்படுகின்றன என்பதுதான் வேதனைக்குரிய ஒன்று.

இதற்கு ஒரு சிறிய உதாரணம்: அரக்கோணம் ரயில் விபத்தில், டிரைவர் செல்போனில் பேசினார் என்று கூறப்பட்டபோது, எடுத்த எடுப்பில் இப்படியொரு கருத்தைச் சொல்லக்கூடாது என்று கூறியது ஊழியர் அமைப்புதான். அவர் பேசினார் என்பது உறுதியானதுமே, அதிகாரிகள்தான் செல்போனில் எங்களைப் பணிநேரத்தில் அழைக்கிறார்கள் என்று கூறப்பட்டது.

இப்போது, அந்த நேரத்தில் வந்த அழைப்புகள் அனைத்தும் டிரைவரின் நண்பர்களிடமிருந்துதான் என்பது உறுதியான பிறகு பேச்சே இல்லை. ரயில்வேக்கு பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தியதோடு, 11 பேர் இறந்துபோன சம்பவத்தின் தீவிரத்தைவிட, சக தொழிலாளியைக் காக்க வேண்டும் என்கின்ற தீவிரம்தான் இன்று இந்தியா முழுவதிலும் லஞ்சமும் முறைகேடுகளும் கண்டுபிடிக்கப்பட்டாலும், களையெடுக்கப்படாமலும் இருப்பதற்குக் காரணம்.

நீதிமன்றங்களால் கண்டிக்கப்பட்ட காவல்துறையினருக்கு மாநில அரசுகள் பதவி உயர்வும், விருதும் அளித்துக் கௌரவிக்கின்றனவே, இது நீதிமன்ற அவமரியாதை இல்லையா? குற்றவாளிகளுக்குக் குடை பிடிக்கும் செயல் அல்லவா? ஆட்சியாளர்களின் ஏவலாளர்களாக இருப்பதற்குத் தரப்படும் மரியாதையாக விருதுகள் மாறி விட்டிருக்கின்றனவே, இதுவேகூட ஊழலுக்கு உரமிடும் செயல்பாடு அல்லவா?

மத்திய லஞ்ச ஒழிப்புத் துறை அறிவிக்கும் தண்டனையை அளிக்காமல் அதை நீர்த்துப் போகச் செய்தால், அதற்காக அந்தத் துறைத் தலைவர் மீது ஏன் வழக்குப் பதிவு செய்து அவரைச் சிறையில் தள்ளக்கூடாது?

ஊழலை ஒழிப்பதில் நமது ஆட்சியாளர்களுக்கு உதட்டளவு அக்கறைதான் இருக்கிறது என்பது புரிகிறது. ஆனால், ஊழல் பெருச்சாளிகள் என்று தெரிந்தும் அவர்களுக்கு மக்கள் மீண்டும் மீண்டும் வாக்களித்துத் தேர்ந்தெடுக்கிறார்களே அதுதான் ஏன் என்று புரியவில்லை!

**மரவள்ளி பயிரில் அசுவினி நோய் தாக்குதல்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 18,2011,00:15 IST

சேலம்: மரவள்ளிக்கிழங்கு பயிரில் பஞ்சு அசுவினி தாக்குதல் அதிகரித்து வருவதால், 25 சதவீதம் விளைச்சல் குறைந்துள்ளது.மரவள்ளிக்கிழங்கு மானாவாரி பயிராக இருப்பதால், குறைந்தளவு தண்ணீரே போதுமானது. தமிழகத்தில், 55 சதவீதமும், கேரளாவில், 35 சதவீதமும் மரவள்ளி பயிர் பயிரிடப்படுகிறது. அதிநவீன தொழில்நுட்பத்துடன் கூடிய தரமான ஸ்டார்ச், ஜவ்வரிசி தயாரிக்கும் தொழிற்சாலைகள் மரவள்ளியை அதிகம் கொள்முதல் செய்கின்றன. தென்மேற்கு பருவமழை துவங்குவதை பொறுத்து, மே, ஜூன், ஜூலை மாதங்களில் மானாவாரியில் நடவு செய்யப்படுகிறது. ஜனவரி, பிப்ரவரியில் இறவையில் பயிரிடப்படுகிறது. மரவள்ளிக்கிழங்கில் கோ-1, கோ-2, கோ-3 போன்ற ரகங்களை கோவை வேளாண் பல்கலை வெளியிட்டுள்ளது.

மரவள்ளிக்கிழங்கு ஆராய்ச்சி பண்ணையில் முள்ளுவாடி-1 ரகம் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, வேறு ரகம் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. தமிழ்நாடு மரவள்ளிக்கிழங்கு ஆராய்ச்சி நிறுவனம் சார்பில், ஹெச்-97, 165, 226, விசாகம் ஹெச்-687 போன்ற கலப்பின ரகங்களை ளியிட்டுள்ளது. தமிழகத்தில் கோ-1 ரகமும், முள்ளுவாடி ரகங்களையும் விவசாயிகள் அதிகம் பயிரிடுகின்றனர்.பத்து மாத பயிரான மரவள்ளிக்கிழங்கு உழவின் போது தொழுஉரம் ஏக்கருக்கு, 10 டன் இட வேண்டும். 10 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சினால் போதுமானது.

தமிழகத்தில் சேலம், மல்லூர், ராசிபுரம், ஆத்தூர் சுற்றுப்பகுதிகளில், 800க்கும் மேற்பட்ட ஸ்டார்ச் மற்றும் ஜவ்வரிசி ஆலைகள் உள்ளன.

நாமக்கல் மாவட்டத்தில் சங்ககிரி, மாவெலிபாளையம், சேலம் மாவட்டத்தில் மகுடஞ்சாவடி, ஆத்தூர், வாழப்பாடி பகுதிகளில் மரவள்ளிக்கிழங்கு அதிகம் பயிரிடப்படுகிறது. மார்க்கெட்டுகளில் ஒரு கிலோ மரவள்ளிக்கிழங்கு, 20 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.மரவள்ளிக்கிழங்கு பயிரில் விவசாயிகளுக்கு லாபம் கிடைத்தாலும், 25 சதவீதம் விளைச்சல் குறைந்துள்ளது.

காரணம், மரவள்ளிக்கிழங்கு பயிரில் தேமல் நோய் தாக்குதல் தீவிரமடைந்து வருகிறது. மேலும், பஞ்சு அசுவினி நோய் தாக்குதலிலும் மரவள்ளிக்கிழங்கு சிக்கியுள்ளது. இலை, தண்டு பகுதிகள் கடுமையாக பாதிக்கப்படுகின்றன. இதை கட்டுப்படுத்த முடியாமல் விவசாயிகள் திணறுகின்றனர். விவசாய பல்கலையிலும் இதுவரை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை. நோய் தாக்குதலில் விவசாயிகள் திப்படைந்துள்ளனர்.

விவசாயிகள் கூறியதாவது: வறட்சியை தாங்கும் பயிராக இருப்பதால், தமிழகம் முழுவதும் மரவள்ளிக்கிழங்கு பரவலாக பயிரிடப்படுகிறது. மரவள்ளி பயிர்களுக்கு இடையே எள், நிலக்கடலை, உளுந்து, பாசிப்பயறு, சோயா மொச்சை போன்ற குறுகிய கால பயிர்களை ஊடுபயிராக பயிரிடலாம். மரவள்ளிக்கிழங்கில் இருந்து சிப்ஸ் தயாரிக்கும் பணியில் ஆயிரக்கணக்கானோர் ஈடுபட்டுள்ளனர்.இவ்வாறு அவர்கள் கூறினர்.

**தமிழகம்,கேரளாவில் முட்டை விலை 254 காசாக நிர்ணயம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 18,2011,00:08 IST

நாமக்கல்: தமிழகம், கேரளாவில், முட்டை விலை, 254 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை விலை, 3 காசுகள் ஏற்றம் கண்டிருப்பது, பண்ணையாளர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 251 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, 3 காசுகள் அதிகரித்து, 254 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.முட்டை விலை, 3 காசுகள் ஏற்றம் கண்டிருப்பது, கோழிப்பண்ணையாளர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை விவரம்: சென்னை, 260 காசுகள், பெங்களூரு, 250 காசுகள், மைசூரு, 246 காசுகள், ஹைதராபாத், 243 காசுகள், மும்பை, 269 காசுகள், விஜயவாடா, 243

காசுகள், கோல்கத்தா, 280 காசுகள், பார்வாலா, 271 காசுகள், டில்லி, 282 காசுகள்.இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.நாமக்கல்லில் நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 41 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை கிலோ, 55 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது.

**எத்தனால் விலையை உயர்த்த சர்க்கரை ஆலைகள் கோரிக்கை**

அக்டோபர் 18,2011,00:10




புதுடில்லி : எத்தனால் விலையை உயர்த்த வேண்டும் என, இந்திய சர்க்கரை ஆலைகள் சங்கம், மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளது. மத்திய அரசு, சென்ற ஆகஸ்ட் மாதம், பெட்ரோலிய நிறுவனங்களுக்கு வழங்கப்படும் ஒரு லிட்டர் எத்தனால் விலையை, 27 ரூபாய் என நிர்ணயித்தது. இந்நிலையில், திட்டக்குழு உறுப்பினர் சவுமித்ரா சவுத்ரி தலைமையிலான குழு, வரிகள் இல்லாமல், பெட்ரோல் விலையை விட 20 சதவீதம் குறைவாக, எத்தனால் விலையை நிர்ணயிக்க வேண்டும் என, மத்திய அரசுக்கு பரிந்துரைத்துள்ளது. இதுகுறித்து, இந்திய சக்கரை ஆலைகள் சங்க தலைவர் நரேந்திர முர்கும்பி கூறுகையில், "ஒரு லிட்டர் எத்தனால் விலை, 32 ரூபாயாக உயர்த்த வேண்டும்; இது, ஏற்றுமதி செய்யப்படும் விலையை (38 ரூபாய்) விட குறைவாகும்' என்றார். எத்தனால் கொள்கை குறித்து, மத்திய அரசு திட்டவட்டமான முடிவு எடுக்காததால், சர்க்கரை ஆலைகள், எத்தகைய திட்டங்களையும், முதலீட்டையும் மேற்கொள்ள முடியாமல் உள்ளன. ஆலைகள், 50 ஆயிரம் கோடி ரூபாயை கரும்பு விவசாயிகளுக்கு வழங்கி வருகின்றன. நடப்பு சர்க்கரை பருவத்தில், இது 60 ஆயிரம் கோடி ரூபாயாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதனால், மத்திய அரசு, எத்தனால் விலையை உயர்த்த வேண்டும்; மேலும் எத்தனால் குறித்து திட்டவட்டமான கொள்கையை அறிவிக்க வேண்டும் என்றும், நரேந்திர முர்கும்பி தெரிவித்தார்.

## செப்டம்பர் மாதத்தில் சர்க்கரை கையிருப்பு 38 சதவீதம் உயர்வு



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*கடந்த செப்டம்பர் 1–ந் தேதி நிலவரப்படி, நாட்டின் சர்க்கரை கையிருப்பு 38 சதவீதம் அதிகரித்து 88.30 லட்சம் டன்னாக இருந்தது. இது, இதற்கு முந்தைய ஆண்டின் இதே மாதத்தில் இருந்த அளவான 64 லட்சம் டன்னை காட்டிலும் 38 சதவீதம் அதிகமாகும். அதேசமயம், கடந்த ஆகஸ்டு மாதம் சர்க்கரை கையிருப்பு 104.70 லட்சம் டன்னாக இருந்தது. இது 2010 ஆகஸ்டு மாதத்தில் 76.00 லட்சம் டன் என்பது குறிப்பிடத்தக்கது. உலக அளவில், சர்க்கரை பயன்பாட்டில் முதலிடத்திலும், உற்பத்தியில் பிரேசிலுக்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்திலும் உள்ள இந்தியா, நடப்பு பருவத்தில் (அக்டோபர் – செப்டம்பர்), 2.65 கோடி டன் சர்க்கரையை உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயம் செய்துள்ளது. இதில், 2.20 கோடி டன் உள் நாட்டு தேவைகளுக்காகவும், மீதமுள்ள 45 லட்சம் டன் ஏற்றுமதிக்காகவும் திட்டமிடப்பட்டுள்ளது.*

*கடந்த 2010–11 ஆம் ஆண்டில் பொது உரிமம் அடிப்படையில் ஏற்றுமதி செய்யப்பட்ட சர்க்கரையின் அளவு 15 லட்சம் டன்னாக இருந்தது.*

*முட்டை விலை 254 காசு ஆனது*

பதிவு செய்த நாள் : 10/18/2011 0:9:6



நாமக்கல் : நாமக்கல் முட்டை விலை 3 காசு உயர்த்தப்பட்டு 254 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணயக் குழு கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் பண்ணையாளர்கள், வியாபாரிகள் கலந்து கொண்டனர். புரட்டாசி மாதம் முடிவடைந்துள்ளதால் முட்டை விற்பனை தமிழகம் மற்றும் கேரளாவில் அதிகரித்துள்ளது.

எனவே முட்டை விலையில் 3 காசுகள் உயர்த்த முடிவு செய்யப்பட்டது. இதை தொடர்ந்து முட்டை விலை 254 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. முட்டை கோழி விலையில் ^2 உயர்த்தப்பட்டு ஒரு கிலோ முட்டை கோழி விலை ^254 ஆக நிர்ணயம் செய்யப்பட்டது. ஒரு கிலோ கறிக்கோழி விலை ^55 ஆக விலை நிர்ணயம் செய்யப்பட்டது.